<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 14.06.2024 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

17) 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் 1 ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள ஆவணங்களையும், விண்ணப்பங்களையும் முறையாக பரிசீலித்துதான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என சொல்லியுள்ளது தவறானது என நான் சொல்லும் நிலையில், அது குறித்து தனியாக மறுப்புரை ஏதேனும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தனியாக சொல்லவில்லை. என் பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

18) தற்போது வரை தாவா சொத்திற்குரிய மின் இணைப்பு 1 ம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது என்றால், சரிதான். 8 ம் பிரதிவாதியான என் தாயார் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றோ, அவரை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றோ என் முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால், சரிதான். என் தந்தைக்கு வாய்மொழியாக பாகம் பிரிந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், அவ்வாறு மேற்படி வாய்மொழி பாக சொத்தில் என் தந்தை அனுபவத்திலிருந்ததற்கான பட்டா எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அவ்வாறு தனிப்பட்டா எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. என் பாட்டி பெயரிலுள்ள பட்டாவைத்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், இவ்வழக்கில் நான் அவ்வாறு என் பாட்டி பெயரிலுள்ள எவ்வித பட்டாவையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

19) என் தந்தை 1 ம் வாதியின் முகவராக இருந்து இவ்வழக்கை நடத்துவதற்கு நான் தாக்கல் செய்த மனுவில், என் தந்தைக்கு என்ன உடல்நல பிரச்சனை உள்ளதாக கூறியுள்ளேன் என்றால், அவருக்கு இதய கோளாறு மற்றும் பக்கவாதம் உள்ளதாக தெரிவித்துள்ளேன். அதற்கு பின் அவர் இறந்துவிட்டதால், வாரிசு உரிமை அடிப்படையில் இவ்வழக்கை நானே நடத்துகிறேன். மேற்படி இ.ம.எண்.4/2020

மனுவுடன் இணைத்து நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ சான்றிதழ் தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால், சரிதான். மேற்படி மருத்துவ சான்றிதழ் **பி.வா.சா.ஆ.1 (EX.B.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் 04.09.2014 என தேதி குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான்.

20) தற்போது என்னிடம் காட்டப்படும் மருத்துவ சான்றிதலும் இ.ம.எண்.4/2020 மனுவுடன் நான் தாக்கல் செய்ததுதான் என்றால், சரிதான். மேற்படி மருத்துவ சான்றிதழ் **பி.வா.சா.ஆ.2 (EX.B.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் 25.06.2015 என தேதி குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கு என் தந்தையால் கடந்த 24.01.2014 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி மருத்துவ சான்றிதழ்கள் 2014, 2015 ம் வருடங்களிலேயே நாங்கள் பெற்றுள்ள நிலையில், கடந்த 2020 ம் வருடம் வரை என் தந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்பதால், இவ்வழக்கை அவரது முகவராக முன்னின்று நடத்துவதற்கு என்னால், எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான்.

21) இ.ம.எண்.4/2020 தாக்கல் செய்வதற்கு முன்பே இ.ம.எண்.2/2019 என்ற மனுவை என் தந்தை தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். மேற்படி இ.ம.எண்.2/2019 என்ற மனுவை தாக்கல் செய்தபோது என் தந்தை நல்ல உடல்நிலையுடன் இருந்தாரா என்றால், சற்று உடல்நலக்குறைவாக இருந்தார். ஆனால், வழக்கு நடவடிக்கைகளை புரிந்து கொண்டு இடைநிலை மனுவின் பிரமான பத்திரிக்கை சங்கதிகளை புரிந்து கொள்ளும் அளவிற்கு அவரது உடல்நிலையும், மனநிலையும் இருந்தது என்றால், சரிதான்.

22) மேற்படி இ.ம.எண்.2/2019 எதிர்மனுதாரர்கள் என்ன எதிருரை தாக்கல் செய்துள்ளனர் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி மனுவை என் தந்தை தொடர்ந்து நடத்தாமல், 07.11.2020 ம் தேதியில் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால், சரிதான். மேற்படி இ.ம.எண்.2/2019 நிலுவையில் இருந்து நிலையில், என் தந்தை கடந்த 05.02.2020 ம் தேதியில் இ.ம.எண்.3/2020

என்ற மனுவை தாக்கல் செய்து அதில் மேற்படி இ.ம.எண்.2/2019 ஐ மீண்டும் திறக்ககோரி பரிகாரம் கோரியிருந்தார் என்றால், சரிதான். மேற்படி இ.ம.எண்.3/2020 மனுவை என் தந்தை புரிந்து கொண்டு நடத்தும் அளவிற்கு அவருக்கு உடல்நிலையும், மனநிலையும் இருந்தது என்றால், சரிதான்.

23) மேற்படி இ.ம.எண்.3/2020 என்ற மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இ.ம.எண்.2/2019 என்ற மனு மீண்டும் திறக்கப்பட்டு, அதில்தான் மேற்படி மருத்துவ சான்றிதழ்கள் குறியீடு செய்யப்பட்டன என்றால், சரிதான். பின்னிட்டு என் தந்தைக்கு உடல்நிலை சரியில்லை என கூறி நான் இவ்வழக்கில் அவரது முகவராக செயல்பட இ.ம.எண்.4/2020 என்ற மனுவை 07.11.2020ம் தேதியில் நான் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். மேற்படி நான் தாக்கல் செய்த இ.ம.எண்.4/2020 என்ற மனுவின் நிருபண பிரமான பத்திரிக்கையில் மேற்படி இ.ம.எண்.2/2019, இ.ம.எண்.3/2020 ஆகிய மனுக்களை பற்றியோ, முந்தைய நடவடிக்கைகள் பற்றியோ நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

24) மேற்படி மனுக்களுக்கு முன்பே 17.06.2019ம் தேதியில் இ.ம.எண்.1/2019 என்ற மனுவை என் தந்தை அவருக்கு பதிலாக என்னை விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என கூறி ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். மேற்படி இ.ம.எண்.1/2019 என்ற மனுவுடன் என் தந்தை மேற்படி இரு மருத்துவ சான்றிதழ்களையும் முதன் முதலாக தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். பின்னிட்டு மேற்படி மனு என் தந்தையின் வழக்கறிஞரால் கடந்த 06.09.2019ம் தேதியில் திரும்ப பெறப்பட்டது என்றால், சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.